( Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUPORUR.

O.S. No. 192/2022

Name : பிரமிளா சரோஜினி **P.W.**1
Father/Husband Name : மோகன்
Caste :
Calling :
Religion :
Age :
Date : 07.06.2024

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.06.2024.

குறுக்கு **விசாரணை** – சத்திய பிராமணம் செய்யப்பட்டார்.

1. நான் சர்வே எண். 327/2 என்பதற்குதான் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் எம்.ஏ வரை படித்துள்ளேன். நான் தாக்கல் செய்த பிராமன வாக்குமூலத்தை பற்றி நன்கு தெரியும் அதில் உள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை தான். பிராமண வாக்குமூலத்தை நான் படித்து பார்த்த பிறகு தான் நான் கையொப்பம் செய்தேன். சர்வே எண். 327/2 பட்டா எண். 1843 0.38 ஏக்கர் அல்லது 0.94 சென்ட் என குறிப்பிட்டுள்ளது சரிதான். பட்டா எண். 1843 செல்வராஜ் பெயரில் உள்ளதை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் கணவருக்கு தான் தெரியும்.

2.வழக்கு சொத்து செல்வராஜ் உடைய பூர்விக சொத்து என குறிப்பிட்டுள்ளது சரிதான். பூர்விக சொத்து என்றால் அதில் அவருடைய வாரிசுகளுக்கு உரிமை உண்டு என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் சரிதான். வா.சா. ஆ.1 பொது அதிகார பத்திரம் மோகன் என்பவருக்க எழுதி கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த மோகன் என்னுடைய கணவர் என்றால் சரிதான். பொது அதிகார பத்திரத்தை அசல் ஆவணம் என்னிடம் தான் உள்ளது அதை ஏன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் என் கணவருக்கு தான் தெரியும்.

3. வா.சா.ஆ.1 ல் சொத்து விவரத்தில் சர்வே எண்.327/3 என்று தான் குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின் பட்டா எண். 1171 என குறிப்பிடப்பட்டுள்து என்றால் சரிதான் இந்த பட்டா என்னிடம் உள்ளது. சொத்து வாங்கும்போது பொதுவாக அதற்கு முன் ஆவணங்கள் முழுவதும் பெற்று கொள்ள வேண்டும் என்றால் சரிதான். என்

கணவர் பவர் ஏஜன்டு என்ற அடிப்படையில் எனக்கு கிரைய ஆவணம் எழுதி கொடுத்தார். வா.சா.ஆ.2 ஆவணத்தில் சர்வே எண். 327/2 என குறிப்பிடப்பட்டுளள்து என்றால் சரிதான். என் கணவர் சர்வே எண். 327/2 டக்கு பொது அதிகாரம் பெறவில்லை என்றும் சர்வே எண்.327/3 க்கு பொது அதிகாரம் பெற்றார் என்று சொன்னால் நாங்கள் முறையாக தான் வாங்கினோம் பொது அதிகார ஆவணத்தில் உள்ள சர்வே எண்ணும் கிரைய ஆவணமத்தில் உள்ள சர்வே எண்ணும் வேறுபட்டுள்ளது என்றால் சரிதான்.

4. வா.சா.ஆ. 1 ஆவணத்தில் பொது அதிகார முகவரின் குடும்ப அட்டை எண் குறிப்பிடப்ப்டுள்ளது அதன் நகல் என்னிடம் உள்ளது என்றால் என் கணவரிடம் தான் உள்ளது. வா,.சா.ஆ.1 ஆவணத்தில் பொது அதிகாரத்தை எழுதி கொடுத்தவர் பெயர் முத்தன் மகன் எம்.செல்வராஜ் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அவருடைய கையொப்பம் சி.செல்வராஜ் என உள்ளது என்றால் அவர் தான் கையொப்பம் செய்தார். முத்தன் மகன் செல்வராஜ் என்பவர் பையனுார் கிராமத்தில் வசித்து வருகிறார் தண்டலம் கிராமத்தில் வசிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

5. வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள பொது அதிகாரட்ம எழுதி கொடுத்த நபரின் புகைப்படம் சின்னகுழந்தையின் மகன் செல்வராஜ் என்பதால் தான் அவர் சி.செல்வராஜ் என கையொப்பம் செய்துள்ளார் என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது. முத்தன் மகன் செல்வராஜ் 28/06/2004 ல் இறந்து விட்டார் என்று சொன்னால் சரியல்ல, அவர் இறந்த பிறகு ஆள்மாறாட்டம் செய்யப்பட்டு வா,சா,ஆ.1 ஆவணம் தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பொது அதிகார வாயிலாக நானும் என் கணவரும் கூட்டாக சேர்ந்து போலியான கிரைய ஆவணம் தயார் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் என் மீதும் என் கணவர் மீதும் 12/04/2017 அன்று மாவட்ட காவல் கண்கானிப்பாளர் காஞ்சிபுரம் அவர்களிடம் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த புகாரின் மீது நடவடிக்கை எடுக்கபடும் என்பதால் தான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல.

6. வா.சா.ஆ. 2 ஆவணத்தின் அடிப்படையில் தான் பட்டா சிட்டா அடங்கல் ஆவணங்களின் பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரிதான். என் பெயரில் உள்ள பட்டாவை ரத்து செய்ய வேண்டும் என்று பிரதிவாதி செங்கல்பட்டு வருவாய் அலுவலரிடம்

மனுதாக்கல் செய்தார் என்று சொன்னால் இல்லை. பிரதிவாதி தாக்கல் செய்த பதிலுரையை நான் படித்து பார்க்கவில்லை. அந்த பதிலுரையில் Counter claim ல் என் பெயரில் உள்ள ஆவணங்களை ரத்து செய்ய கோரி பரிகராம் கேட்டபட்டது என்று சொன்னால் எனக்கு தெரியாது.

**பிரதிவாதி வழக்கறிஞர் கேட்டு கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

Sd/- N.Anupriya, 07.06.2024

Taken down by me in open court read over in the witness in the presence of the accused and admitted by the witness to be correct

DM cum JM/TPR.